සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

| | |
|---|---|
| **තෙවන වාර පරීක්ෂණය 2020** | **11 ශ්‍රේණිය** |
| **மூன்றாம் தவணைப் பரீட்சை 2020** | **தரம் 11** |
| **Third Term Test 2020** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| **නාට්‍ය හා රංග කලාව** | **I** | **කාලය - පැය 3.00** |
| **நாடகமும் அரங்கியலும்** | **I** | **நேரம் 3.00 மணி** |
| **Drama & Theater** | **I** | **Time 3.00** |

பகுதி 1

01. நாடகம் என்பது இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது எனக்கூறியவர்
    1) ம. சண்முகலிங்கம் 2) மௌனகுரு 3) பரதமுனிவர் 4) சங்கரதாஸ்சுவாமிகள்

02. வாசிக அபிநயம் கைக்கொண்டு முதன்மை பெறும் நாடக வடிவம்
    1) தொலைக்காட்சி 2) வானொலி 3) சினிமா 4) மேடைநாடகம்

03. கூத்து என்றவுடன் எம்மனதில் தோன்றுபவை
    1) பாடல் 2) இசை 3) நாடகம் 4) ஆடல்

04. “மனமே” எனும் சிங்கள நாடகத்தை தோற்றுவித்தவர்
    1) பராக்கிரம சீரியஸா 2) பேரா. எதிரவீரச் சரத்சந்திர 3) கலாபக்தி 4) குணதிலக

05. இந்தியாவில் தெருக்கூத்து ஆடப்படும் பிரதேசம்
    1) ஆந்திரா 2) கேரளா 3) தமிழ்நாடு 4) கர்நாடகா

06. கோவலன் கூத்து பிரதானமாக இடம்பெறும் பிரதேசம்
    1) முல்லைத்தீவு 2) மட்டக்களப்பு 3) யாழ்ப்பாணம் 4) மலையகம்

07. நடிகன் தனது உடம்பிலிருந்து எத்தனை இடங்களில் ஒளியைப் பிறப்பிக்கின்றான்
    1) 3 2) 4 3) 5 4) 7

08. நாடகத்தின் சர்வாதிகாரி என்பவர்
    1) நாடக ஆசிரியர் 2) தயாரிப்பாளர் 3) நெறியாளர் 4) முகாமையாளர்

09. படச்சட்ட அரங்கின் மிகப் பிரதானமான பகுதி
    1) சி சி 2) டி சி 3) டி எல் 4) டி ஆர்

10. கண்ணகி அம்மன் வழிபாட்டோடு தொடர்புடைய சடங்கு
    1) வேட்டை திருவிழா 2) குளிர்த்தி சடங்கு
    3) சூரன்போர் 4) காமன்கூத்து

11. கூத்தை புத்தாக்கம் செய்தவர்

1) கா. சிவத்தம்பி
2) சி. மௌனகுரு
3) சு. வித்தியானந்தன்
4) க. கைலாசபதி

12. பரத முனிவர் கூறும் ரசங்கள் எத்தனை?

1) 7
2) 6
3) 8
4) 9

13. உலக நாடக வரலாற்றில் முதலாவது நடிகராக விளங்குபவர்

1) தெஸ்பிஸ்
2) அரிஸ்டோட்டில்
3) சோபோகிளிஸ்
4) ஜூலியஸ் சீசர்

14. படச்சட்ட மேடையின் தாயகம்

1) உரோம்
2) கிரேக்கம்
3) இத்தாலி
4) இந்தியா

15. காமன் கூத்தின் பிரதான இசைக்கருவி

1) உடுக்கு
2) தப்பு
3) ஆர்மோனியம்
4) வயலின்

16. வடமோடிக் கூத்தின் பிரதான உணர்வு

1) காதல்
2) மகிழ்வு
3) வீரம்
4) சோகம்

17. வேடமுக நாடகம் என வரணிக்கப்படுவது

1) நார்த்தி
2) கோலம்
3) சொக்கரி
4) நாடகம்

18. உலகலாவிய ரீதியில் தமிழ்மொழி மூலம் வரும் சஞ்சிகை

1) கட்டியம்
2) இதழ்
3) பார்வை
4) அலைக்காற்று

19. பூரணத்துவம் மிக்க அடிகளை தெரிவுசெய்யப்படும் முறை

1) திறந்தமுறை
2) மூடிய தெரிவு
3) சல்லடை தெரிவு
4) தெரிவு முறை

20. சர்வதேச நாடக தினமாக கொண்டாடப்படுவது

1) மார்ச் 30
2) மார்ச் 27
3) மே 30
4) மே 27

21. நடிகன் ஒருவனுக்கு அவசியமில்லாதது

1) ஆக்கத்திறன்
2) அழகான உடல்
3) முனைப்பான குரல்
4) தளர்வான உடல்

22. "புதியதொரு வீடு" நாடகம் முதலில் மேடையேற்றப்பட்ட ஆண்டு

1) 1971
2) 1980
3) 1975
4) 1950

23. யதார்த்தமான தமிழ் நாடகங்களை முதன் முதலில் எழுதியவர்

1) க. கணபதிப்பிள்ளை
2) குழந்தை ம. சண்முகலிங்கம்
3) நா. சுந்தரலிங்கம்
4) சுஹைர் ஹமிட்

24. இராவனேசன் கூத்து எந்த மரபிற்குரியது

1) வடமோடி
2) தென்மோடி
3) மட்டக்களப்பு மரபு
4) இந்திய மரபு

25. "கோடை" எனும் நாடகத்தை எழுதியவர்

1) இளைய பத்மநாதன்
2) கா. சிதம்பரநாதன்
3) மஹாகவி
4) சண்முகநாதன்

26. கஞ்சற் கருவிக்கு உதாரணமாக குறிப்படுவது
1) மிருதங்கம் 2) வீணை 3) தம்புரா 4) சல்லரி

27. நாடக கலையின் தாயகமாக கருதப்படுவது?
1) இந்தியா 2) கிரேக்கம் 3) உரோம் 4) பிரித்தானியா

28. “வாசகப்பா நாடக” வடிவம் இடம்பெறும் பிரதேசம்
1) மலையகம் 2) யாழ்ப்பாணம் 3) மன்னார் 4) மட்டக்களப்பு

29. இலண்டனில் தமிழ் அவைக்காற்றுக் கழகத்தை ஆரம்பித்து இன்று வரை நாடக முயற்சியில் ஈடுபடுபவர்
1) க. பாலேந்திரன் 2) சிதம்பரநாதன் 3) சி. மௌனகுரு 4) க. சிவத்தம்பி

30. நாடகத்தின் விமர்சகர் எனப்படுபவர்
1) நாடகத்தின் குறைகளை கூறுபவர் 2) நாடகத்தின் குறை நிறைகளை கூறுபவர்
3) நாடகத்தின் நிறைகளை கூறுபவர் 4) நாடகத்தின் எழுத்துருவை தீர்மாணிப்பவர்

31. கதகளி பிரதானமாக இடம்பெறுவது
1) தமிழ்நாட்டில் 2) கேரளாவில் 3) ஒரிசாவில் 4) மணிப்புரியில்

32. கபுக்கி நாடக வடிவம் பிரதானமாக இடம்பெறும் நாடு
1) இந்தியா 2) சீனா 3) ஜப்பான் 4) கிரேக்கம்


33. நடிகர் வேடமுகத்தை அணிவதன் மூலம்
1) தன்னை உருமாற்றுகிறார் 2) வகிபாகத்திற்கு அழுத்தம் கொடுக்கின்றார்
3) பாத்திரத்தை சுட்டுகின்றார் 4) மேற்கூறிய யாவும்

34. கூத்துகளுக்கு பயன்படுத்தப்படும் ஒப்பனை பொருள்
1) நிறப்பூச்சு 2) பவுண்டேஷன் 3) அரிதாரம் 4) சாயம் வகைகள்


35. ஒளியமைப்பில் பார்வைக்குழியை ஏற்படுத்தும் ஒளி
1) மங்களாக்கி 2) அடிப்பாதை ஒளி 3) சுட்டொளி 4) பரப்பொளி

36. பார்ப்போரில் பதிற்குறி தாக்கம் செலுத்தும் கலைகளில் ஒன்று
1) ஓவியம் 2) கட்டடம் 3) நாடகம் 4) சிற்பம்

37. இப்படம் குறிப்பது
1) பலே 2) ஒபேரா
3) கதகளி 4) யக்ஷகானம்




38. இப்படத்தில் காட்டப்படும் ஒளியமைப்பு
1) பொட்டொளி 2) பரப்பொளி
3) கீற்றொளி 4) தலைமேல் ஒளி



39. இப்படத்தில் காட்டப்படும் முகமூடி
1) சற்றயர் 2) மகிழ்நெறி
3) அவலம் 4) எதுவுமில்லை



40. இங்கு காட்டப்பட்டுள்ள அரங்கு



1) கிரேக்க அரங்கு
2) உரோம அரங்கு
3) மத்தியகலை அரங்கு
4) வட்டகளரி

## பகுதி II

**முதலாம் வினா கட்டாயமானது. முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

**01.** கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடையளிக்குக
1. புதியதொருவீடு நாடகம் யாரால் எழுதப்பட்டது?
2. மாதவிக்கு வழங்கப்பட்ட பட்டம் யாது?
3. நாடகத்திற்கு நிதயுதவிகளை வழங்குபவர் யார்?
4. நல்லத்தங்காள் கதை வடிவம் கொண்ட கூத்து இடம்பெறும் பிரதேசம் எது?
5. சிறுவர் நாடகத்தின் முன்னோடி என வர்ணிக்கப்படுபவர் யார்?
6. சொக்கரி நிகழ்த்தப்படும் அரங்கவெளி எது?
7. காமன் கூத்து அரங்கை எவ்வாறு அழைப்பார்?
8. அபிநயம் பற்றி கூறும் நூல் எது?
9. நாடக கலையின் பிரதான இரு பண்புகளை குறிப்பிடுக.
10. அரங்க கைவினைகள் இரண்டை குறிப்பிடுக

**02.** 1. ஆற்றுகை கலை என்பதை வரையறை செய்க.
2. நாடக கலையின் பண்புகளை குறிப்பிடுக.
3. நாடகத்திற்கும் சினிமாவுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

**03.** 1. அபிநயம் என்றால் என்ன?
2. நால்வகை சித்தரிப்புகள் கூறுக.
3. நால்வகை சித்தரிப்புகள் ஒரு நாடகத்திற்கு எவ்வாறு துணைபுரிகின்றது?

**04.** 1. கூத்துகளைப் பிரதேச ரீதியாக வகைப்படுத்துக.
2. கூத்தில் பேராசிரியர் வித்தியானந்தன் ஏற்படுத்திய மாற்றங்கள் எவை?
3. கூத்தின் வடிவத்துள் புதிய உள்ளடக்கங்களை இணைத்தவர்களையும் அவர்களின் படைப்புக்களையும் தருக.

**05.** 1. நவீன நாடகத்தின் தந்தை யார்? அவர் நடித்த நாடகங்கள் எவை?
2. பேராசிரியர் கணபதிப்பிள்ளை நாடகத்தில் செய்த பணிகள் யாவை?
3. இவருடைய நாடகங்கள் எவை?

**06** பின்வருவனவற்றில் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1. அரங்க விளையாட்டு
2. பேரா. சி. மௌனகுரு
3. நாடகமும் சினிமாவும்
4. நா. சுந்தரலிங்கம்